
# தீர்க்கதரிசனத்தின் தேவகதைகள்

## பாடம் 19: மகளின் நடனம்

மாற்கு 6:17-29

### நடந்த கதை . . .

ஏரோதின் மனைவி ஏரோதியாள் யோவான் ஸ்நானனை வெறுத்தாள். அவள் தன் கணவனான பிலிப்புவை விட்டுவிட்டு, அவன் சகோதரனும் தீயவனும் செல்வந்தனுமான ஏரோதுவை மணந்ததால், யோவான் ஸ்நானன் அவளை விபசாரி என்று சொல்லியிருந்தார். ஏரோதிடம் தனக்கிருந்த செல்வாக்கால், யோவானை அந்தத் துன்மார்க்க ராணி பழிவாங்க நினைத்தாள். ஏரோதை வற்புறுத்தி, அவனைச் சிறையிலடைத்தாள்; பிறகு, கொல்லச்சென்னாள்; ஏரோது சம்மதிக்கவில்லை. யோவான் ஒரு மெய்த்தீர்க்கதரிசி என்பதால், மக்கள் கோபங்கொள்வார்களெனப் பயந்தான்.



இறுதியில், கச்சிதமாக ஒரு திட்டத்தை ஏரோதியாள் வகுத்தாள். ஏரோதுவின் பிறந்தநாளைக் கொண்டாடுவதற்கு ராஜ்யத்திலிருந்த அவனுடைய நண்பர்களையும் பிரபுக்களையும் அழைத்தாள்; பிறகு தன் அழகு மகளான சலோமேயை நடனமாட வைத்தாள். திராட்சரசம் சில கோப்பைகள் அருந்தியதுமே, சலோமேயின் வசீகரமான ஆட்டத்திற்குப் பரிசாக என்ன வேண்டுமென்று ஏரோது கேட்பானென்பது ஏரோதியாளுக்குத் தெரியும்.

அவளுடைய கொடிய திட்டம் பலித்தது. சலோமே ஆடி முடித்தாள்; ஆடி முடித்ததுமே, 'நீ என்னிடத்தில் எதைக் கேட்டாலும், அது என் ராஜ்யத்தில் பாதியானாலும், அதை உனக்குத் தருவேன்' என்று முட்டாள்த்தனமாக வாக்களித்தான் ஏரோது. மாற்கு 6:23. ராஜாவின் தாராளத்தை குடிமயக்கத்தில் இருந்தவர்கள் பாராட்டினார்கள்; ஆனால், அந்தச் சிறு பெண் யோவான் ஸ்நானனின் தலையை ஒரு தட்டில் கொண்டுவர வேண்டுமென்று கேட்டதுதான் அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

அவ்வளவு கொடுமையான ஒரு பரிசை அவள் கேட்பாளென்று ஏரோதும் எதிர்பார்க்கவில்லை. அவையோர் பார்த்துக் கொண்டிருக்க, தன்னைக் கையாலாகதவன் என்று யாரும் நினைக்கக்கூடாதெனப் பயந்த ராஜா, அரைகுறை மனதோடே அதற்கு உத்தரவிட்டான். அன்றைய தினமே யோவான் ஸ்நானன் சிரச்சேதம் பண்ணப்பட்டார்.

தாயும் மகளும் சேர்ந்து அரசாங்கத்தைப் பயன்படுத்தி, தேவமக்களை உபத்திரவப்படுத்தியது இது முதல்முறை அல்ல.

## ஆராய்ச்சிப் பகுதி

கொடுக்கப்பட்டுள்ள வேதாகம வசனங்களை வாசித்து, கோடிட்ட இடங்களை நிரப்புக.

**1. பழைய ஏற்பாட்டில் தாயும் மகளுமாக தேவ மக்களைத் துன்புறுத்தியவர்கள் யார்?**

**1இராஜாக்கள் 18:13.** _______________ கர்த்தரின் தீர்க்கதரிசிகளைக் கொன்று(போட்டாள்).

**2இராஜாக்கள் 11:1.** _______________ தன் குமாரன் இறந்துபோனதைக் கண்டபோது, எழும்பி ராஜ வம்சத்தார் யாவரையும் சங்காரம்பண்ணினாள்.

**குறிப்பு:** பழைய ஏற்பாட்டுக் காலத்தில், வடராஜ்யமான இஸ்ரவேலில் யேசபேலும், தென்ராஜ்யமான யூதாவில் அவளுடைய மகள் அத்தாலியாளும் கொடுங்கோல் ஆட்சிபுரிந்தார்கள்; தேவ மக்கள் மத்தியில் பாகால் தொழுகையைப் புகுத்தினார்கள்.

**2. வெளிப்படுத்தல் 14இல் உள்ள இரண்டாம் தூதனின் செய்தி என்ன?**

**வெளிப்படுத்தல் 14:8.** வேறொரு தூதன் பின்சென்று, "_______________ மகாநகரம் _______________ விழுந்தது! தன் வேசித்தனமாகிய உக்கிரமான மதுவைச் சகல ஜாதிகளுக்கும் குடிக்கக்கொடுத்தாளே!" என்றான்.

**குறிப்பு:** ஓர் அவசர முத்தூதின் செய்தி வெளிப்படுத்தல் 14 இல் உள்ளது; இயேசுவின் இரண்டாம் வருகைக்குமுன் அது உலகம்முழுவதிலும் பிரசங்கிக்கப்படவேண்டும். இந்தப் பாடத்தில் இரண்டாம் தூது பற்றிப் பார்ப்போம். பாபிலோன் தன் வேசித்தனமாகிய மதுவை சகல தேசத்தாரும் குடிக்கும்படிச் செய்துவிட்டதாக தேவன் குற்றஞ்சாட்டினார். கத்தோலிக்க விசுவாசிகளும், புரொட்டஸ்டண்ட் விசுவாசிகளும் விரும்பாத, ஆனால் உண்மையான சில செய்திகளை இந்தப் பாடத்தில் பார்ப்போம். நாம் அனைவருமே நேசிக்கிற இயேசுதாம் இரண்டாம் தூதைக் கொடுத்திருக்கிறார். அவருடைய சத்தியத்திற்கு உங்கள் இருதயத்தைத் திறவுங்கள்; உங்களை இரட்சித்து, ஆசீர்வதிக்கவேண்டுமென்பதே அவருடைய நோக்கம்.

**3. வெளிப்படுத்தல் 17 இல் தேவன் எவ்வாறு பாபிலோனைச் சுட்டிக்காட்டுகிறார்?**

**வெளிப்படுத்தல் 17:18.** நீ கண்ட _______________ பூமியின் ராஜாக்கள்மேல் ராஜ்யபாரம் பண்ணுகிற மகாநகரமேயாம் என்றான்.

**குறிப்பு:** வேதாகமத் தீர்க்கதரிசனத்தில் ஸ்திரீ என்பது சபைக்கு அடையாளம். நல்ல ஸ்திரீ என்பது தேவசபை. (வெளி 12). மோசமான ஸ்திரீ என்பது தவறான சபை. விழுந்துபோன அந்த ஸ்திரீ யாரென்பதை நாம் தெரிந்துகொள்ளலாம்; ஏனென்றால், வெளிப்படுத்தல் எழுதப்பட்ட சமயத்தில் அவள் அரசாண்டு கொண்டிருந்ததாக வெளி 17:18 கூறுகிறது. அஞ்ஞான ரோம் தன் அதிகாரத்தையும் தலைநகரத்தையும் வல்லமையையும் போப்பு மார்க்கத்திடம் கொடுத்ததாக வரலாறு கூறுகிறது. (லூக்கா 2:1).

**4. பாபிலோன் என்பது பாப்புமார்க்க ரோமைச் சுட்டிக்காட்டுகிறது என்பதற்கு வெளிப்படுத்தல் 17இல் உள்ள வேறு ஆதாரம் என்ன?**

**வெளிப்படுத்தல் 17:3.** _______________ நாமங்களால் நிறைந்ததுமான சிவப்பு நிறமுள்ள மிருகத்தின்மேல் ஒரு ஸ்திரீ ஏறியிருக்கக் கண்டேன்.

அ. அவள் தூஷணம் பேசினாள் (வச 3).
ஆ. இரத்தாம்பரமும் சிவப்புமான ஆடையை அணிந்திருந்தாள். (வச 4).
இ. அவள் தாய் என்று அழைக்கப்பட்டாள். (வச 5).
ஈ. விழுந்துபோன வேசிப்பிள்ளைகளும் அவளுக்கு இருந்தார்கள். (வச 5).
உ. அவள் பரிசுத்தவான்களை உபத்திரவப்படுத்தி, கொலைசெய்தாள் (வச 6).
ஊ. 'ஏழு மலைகள்' மேல் அவள் உட்கார்ந்திருந்தாள். (வச 9).
எ. 'பூமியின் ராஜாக்கள்' மேல் அரசாண்டாள். (வச 18).





**குறிப்பு:** இதிலுள்ள ஒவ்வொரு விபரமும் போப்புமார்க்க ரோமிற்குப் பொருந்தும். அதன் தலைநகரம் 'ஏழு மலைகளின் நகரமான' ரோம். போப்புக்கு அடுத்தபடியாக உள்ள குருமார்களான மேற்றிராணியார்களுடைய அங்கியின் நிறம் இரத்தாம்பரம். போப்பாண்டவர் முக்கியமான நிகழ்ச்சிகளுக்கு இரத்தாம்பர நிற அங்கியை அணிவார். இருண்ட காலங்களில் பரிசுத்தவான்களை உபத்திரவப்படுத்தியதையும் பூமியின் ராஜாக்களை அரசாண்டதையும் ரோமன் கத்தோலிக்கச் சபை ஒத்துக்கொள்கிறது. (போப்புமார்க்கத்தின் தேவதூஷணப் பாவம்பற்றி அறிய 13 ஆம் பாடத்தைப் பார்க்கவும்). தேவன் சொல்லும் அடையாளங்கள் மிகக் கச்சிதமாகப் பொருந்துகின்றன. அதாவது, விழுந்துபோன தாய்ச் சபையை விழுந்துபோன அதன் மகள்கள் எதிர்த்தார்கள். அவர்கள் புரொட்டஸ்டண்ட்ஸ் என்றழைக்கப்பட்டார்கள். (புரொட்டஸ்ட்= எதிர்ப்பு). ஜேம்ஸ் ஏ. ஓப்ரையன் எனும் பாதிரியார் "இவ்வாறு ஆசரிப்பது (சனிக்கிழமைக்குப் பதிலாக ஞாயிற்றுக்கிழமையில்) தாய்ச் சபையின் ஒரு நினைவுச் சின்னமாக இருக்கிறது"[1] என்று சொல்லியிருக்கிறார்.

1 The Faith of Millions (Huntington, IN: Our Sunday Visitor, Inc., 1974), p. 401).

**5. வெளிப்படுத்தல் 13 மற்றும் வெளிப்படுத்தல் 17 இலுள்ள மிருகங்கள் எவ்வாறு ஒத்திருக்கின்றன?**

**வெளிப்படுத்தல் 13:1.** நான் கடற்கரை மணலின்மேல் நின்றேன். அப்பொழுது சமுத்திரத்திலிருந்து ஒரு மிருகம் எழும்பிவரக் கண்டேன்; அதற்கு ஏழு _______________ பத்துக் _______________ இருந்தன; ... அதின் தலைகளின் மேல் தூஷணமான நாமமும் இருந்தன.

**வெளிப்படுத்தல் 17:3.** ஏழு _______________ பத்துக் _______________ உடையதும் _______________ நாமங்களால் நிறைந்ததுமான சிவப்புநிறமுள்ள மிருகத்தின்மேல் ஒரு ஸ்திரீ ஏறியிருக்கக் கண்டேன்.

**குறிப்பு:** வெளிப்படுத்தல் 13:1–10 லும், வெளிப்படுத்தல் 17 லும் ஒரே மிருகம்பற்றித்தான் சொல்லப்பட்டுள்ளது. இரண்டும் ரோம வல்லமையைச் சுட்டிக்காட்டுகின்றன. சபையும்–அரசும் இணைந்ததையும், சபையானது (விழுந்துபோன ஸ்திரீ) அரசாங்கத்தை (மிருகம்) ஆட்டிப்படைத்ததையும் வெளி 17 சுட்டிக்காட்டுகிறது. இரண்டு மிருகங்கள் சேர்ந்து மற்றவர்கள் தங்களைத் தொழும்படி கட்டாயப்படுத்தினதாக வெளி 13 கூறுகிறது. பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய் என்று வெளி 17 இல் சொல்லப்படும் அதே வல்லமைதான் முதலாம் மிருகம். இரண்டாம் மிருகம் என்னவென்று சீக்கிரமே இந்தப் பாடத்தில் பார்க்கப்போகிறோம்.

**6. 'பாபிலோன்' எனும் வார்த்தை எப்படி உருவானது? அதன் அர்த்தம் என்ன?**

**ஆதியாகமம் 11:4,6,9.** நமக்கு ஒரு நகரத்தையும், வானத்தை அளாவும், சிகரமுள்ள ஒரு கோபுரத்தையும் கட்(டுவோம்) ... அப்பொழுது கர்த்தர் ... நாம் இறங்கிப் போய், ஒருவர் பேசுவதை மற்றொருவர் அறியாதபடிக்கு, அங்கே அவர்கள் பாஷையைத் _______________ (குழப்புவோம்) என்றார். அப்படியே கர்த்தர் அவர்களை அவ்விடத்திலிருந்து பூமியின் மீதெங்கும் சிதறிப்போகப்பண்ணினார்; அப்பொழுது நகரம் கட்டுகிறதை விட்டுவிட்டார்கள். பூமியெங்கும் வழங்கின பாஷை _______________, அதின் பேர் பாபேல் என்னப்பட்டது.

**குறிப்பு:** 'பாபேல்', 'பாபிலோன்' என்றால் குழப்பம் என்று அர்த்தம். ஜலப்பிரளயத்திற்குப் பிறகு தேவனை நம்பாதவர்கள் கட்டின பாபேல் கோபுரத்திலிருந்துதான் அந்தப் பெயர் வந்தது. எதிர்காலத்தில் வெள்ளம் வந்தாலும் அழியக்கூடாது என்பதற்காக மிகவும் உயரமாக அதைக் கட்டினார்கள். ஆனால், ஆண்டவர் அவர்களுடைய பாஷைகளைக் குழப்பினார்; அதனால் உண்டான குழப்பத்தால் அதைக் கட்டும் திட்டத்தையே கைவிட்டார்கள். பிறகு, ஓர் அஞ்ஞான உலக ராஜ்யமாக பாபிலோன் உருவெடுத்தது; தேவ மக்களை உபத்திரவப்படுத்தியது. வெளிப்படுத்தல் புத்தகத்தில், 'பாபிலோன்' என்பது தேவனுடைய ஆவிக்குரிய இஸ்ரவேலருக்கு எதிரான ஒரு போலியான மார்க்கத்தைச் சுட்டிக்காட்டுகிறது.

**7. பாபிலோனைவிட்டு, தம் மக்கள் வெளியேற வேண்டுமென்று சொல்லும்போது, பாபிலோனை தேவன் எவ்வாறு விவரிக்கிறார்?**

**வெளிப்படுத்தல் 18:2–4.** அவன் பலத்த சத்தமிட்டு: மகா பாபிலோன் _______________! விழுந்தது! அது பேய்களுடைய குடியிருப்பும் சகலவித அசுத்த ஆவிகளுடைய காவல்வீடு(மாயிற்று) ... என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்.

**குறிப்பு:** பாபிலோன் விழுந்ததாகவும், அது பிசாசுகளுக்கும் தீய ஆவிகளுக்கும் வீடானதாகவும் தேவன் கூறுகிறார். பாபிலோனின் பாவங்கள் கொடுமையானதால் அது அழிக்கப்படும் என்றும் எச்சரிக்கிறார். தேவ மக்கள் சீக்கிரத்தில் வெளியேறவேண்டும்; அல்லது, பாபிலோனின் வாதைகளில் அவர்களும் அழிந்துபோவார்கள்.

### 8. பாபிலோன் தன் மதுவால் உலகத்தை மயக்கினதாக இயேசு அடிக்கடி குற்றஞ்சாட்டுகிறார். அந்த மது எது?

**வெளிப்படுத்தல் 17:4.** ____________________ *நிறைந்த பொற்பாத்திரத்தைத் தன் கையிலே பிடித்திருந்தாள்..*

**குறிப்பு:** அவள் மதுவின் பாத்திரம் வெறியூட்டும் பொய்களால் அல்லது பொய்ப்போதகங்களால் முற்றிலும் நிறைந்திருக்கிறது. நீதி 12:22. அதனால் மக்கள் ஆவிக்குரிய வெறிகொள்கிறார்கள். அவளுடைய வஞ்சகப் பொய்களில் ஒரு சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

அ. பத்துக்கற்பனைகள் இன்று வழக்கற்றுவிட்டன. (பாடம் 6 ஐப் பார்க்கவும்).
ஆ. ஞாயிறு பரிசுத்தம் (பாடம் 14 ஐப் பார்க்கவும்).
இ. இரகசிய வருகை (பாடம் 3 ஐப் பார்க்கவும்).
ஈ. ஆத்துமா அழிவில்லாதது (பாடம் 9 ஐப் பார்க்கவும்).
உ. நரகத்தில் நித்தியமாக வாதிப்பு (பாடம் 10 ஐப் பார்க்கவும்).
ஊ. பாதிரியாரிடம் பாவங்களை அறிக்கையிடுதல் (பாடம் 13 ஐப் பார்க்கவும்).
எ. போலியான ஞானஸ்நானங்கள் (பாடம் 11 ஐப் பார்க்கவும்).
ஏ. அந்நியபாஷைக் குழப்பம் (பாடம் 23 ஐப் பார்க்கவும்).

பாபிலோனின் செய்திகளை ஏற்றுக்கொள்ளும்போது ஆவிக்குரிய வெறித்தனம் உண்டாகிறது; வேதாகமம் சொல்வதைப் புரிந்துகொள்ளும் திறன் மங்குகிறது. ஏனென்றால், சத்தியத்தைப் புரிந்துகொள்ளும் திறனை இந்தப் பொய்ப் போதனைகள் மழுங்கடிக்கின்றன.

### 9. கடைசிக்காலத்தில் அந்த மிருகத்திற்கு உதவிசெய்யும் வல்லமை எது?

**வெளிப்படுத்தல் 13:11,12.** *பின்பு,* ________ ________________ *பூமியிலிருந்து எழும்பக் கண்டேன்; அது ஒரு ஆட்டுக்குட்டிக்கு ஒப்பாக இரண்டு கொம்புகளையுடையதாயிருந்தது, வலுசர்ப்பத்தைப்போலப் பேசினது. அது முந்தின மிருகத்தின் அதிகாரம் முழுவதையும் அதின் முன்பாக நடப்பித்து, சாவுக்கேதுவான காயம் ஆறச் சொஸ்தடைந்த முந்தின மிருகத்தைப் பூமியும் அதின் குடிகளும் வணங்கும்படிச் செய்தது.*

**குறிப்பு:** உங்களைத் தைரியப்படுத்திக் கொள்ளுங்கள். வெளி 13 இன் இரண்டாம் மிருகம் அமெரிக்க ஐக்கிய நாடுகளைச் சுட்டிக்காட்டுகிறது. அதற்கான ஆதாரத்தைப் பாருங்கள்.

**அ. அது எழும்பின காலம்**

முதலாம் மிருகம் சிறைப்படுத்தப்பட்டு, சாவுக்கேதுவான காயத்தைப் பெறும் அதே வேளையில் இந்த வல்லமை எழுந்ததாக தேவன் சொல்லுகிறார். வெளி 13:10,11. 1260 வருடக் காலக் கட்டத்தின் இறுதியில், அதாவது 1798 இல் போப்புமார்க்க வல்லமை ஒழிந்தது; அந்தச் சமயத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகள்உருவாயிற்று. அமெரிக்கா 1776 இல் சுதந்திர தேசமாக அறிவிக்கப்பட்டது; 1787 இல் அரசியல் அமைப்புக்கு ஒப்புதல் தெரிவித்தது; 1791 இல் உரிமைச் சட்டங்களை ஏற்றுக்கொண்டது; 1798 இல் உலக வல்லரசாக அங்கீகரிக்கப்பட்டது.

**ஆ. அது பூமியிலிருந்து எழும்பியது**

பெரும்பாலான ராஜ்யங்கள் (மிருகங்கள்) தோன்றும் தண்ணீரானது மக்கள் கூட்டம் அதிகமான இடத்தைச் சுட்டிக்காட்டுவதாக ஏற்கனவே பார்த்தோம். வெளி 17:15. ஆனால் பூமி என்பது இதற்கு நேர் எதிரான அர்த்தமுடையது. அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குத்தான் இந்த அடையாளம் மிகச் சரியாகப் பொருந்தும். ஏனென்றால், மக்கள் தொகை குறைவான ஒரு கண்டத்தில் அது ஸ்தாபிக்கப்பட்டது.

**இ. ஒரு ஆட்டுக்குட்டிக்கு ஒப்பாக இரண்டு கொம்புகள் இருந்தன**

தீர்க்கதரிசனத்தில், ஆட்டுக்குட்டியானது இயேசுவைச் சுட்டிக்காட்டுகிறது; கொம்பானது வல்லமையைச் சுட்டிக்காட்டுகிறது. இரண்டு பெரிய கொம்புகளும் புரொட்டஸ்டண்ட் நியதிகளைச் சுட்டிக்காட்டுகின்றன; இவற்றை அடிப்படையாக வைத்துத்தான் அமெரிக்கா தன் சமுதாய, மதச் சுதந்தரத்தை அமைத்துள்ளது. அதை ஸ்தாபித்தவர்கள், ஐரோப்பாவின் மத, அரசியல் உபத்திரவத்திலிருந்து தப்பிக்க அங்குச் சென்றவர்கள் சமுதாய, மதச் சுதந்தர நியதிகளின் அடிப்படையில் அவர்கள் ஒரு சமுதாயத்தை ஏற்படுத்தினார்கள். “மன்னர் இல்லாத ஓர் அரசு; போப்பாண்டவர் இல்லாத ஒரு மதம்.”



### 10. தீர்க்கதரிசனத்தின்படி, என்ன ஒரு தீவிரமான மாற்றம் அமெரிக்காவில் நடைபெறும்?

**வெளிப்படுத்தல் 13:11.** *அது ...* ______________________ ____________.

**குறிப்பு:** அமெரிக்கா வலுசர்ப்பமென்று அழைக்கப்படுகிறது. ஏனென்றால், ‘சபையும் அரசும் வேறு’ என்கிற மூலப் புரொட்டஸ்டண்ட் நியதிகளைவிட்டு சாத்தானுடைய செல்வாக்கால், முன்னிருந்த நிலைக்கே செல்லும். மனசாட்சிக்கு விரோதமாகத் தொழுகை செய்யும்படி, பொருளாதாரத் தடைகள் (வச 16,17) மரணதண்டனை (வச 15) மூலமாக மக்களைக் கட்டாயப்படுத்தும் விதத்தில் மதச்சட்டங்களைக் கொண்டுவரும்.

### 11. கடைசிக்காலத்தில் தேவமக்களுக்கு எதிராக எந்த மூன்று வல்லமைகள் இணையும்?

**வெளிப்படுத்தல் 16:13.** *அப்பொழுது, வலுசர்ப்பத்தின் வாயிலும் மிருகத்தின் வாயிலும் கள்ளத்* ______________________________ *வாயிலுமிருந்து தவளைகளுக்கு ஒப்பான மூன்று அசுத்த ஆவிகள் புறப்பட்டுவரக் கண்டேன்.*

**குறிப்பு:** சாத்தான்தான் வலுசர்ப்பம் (வெளி 12:9); அஞ்ஞான மார்க்கங்கள் மூலம் கிரியைசெய்கிறான். போப்பு மார்க்கம்தான் வெளி 13:1–10 இலுள்ள மிருகம். அமெரிக்க புரொட்டஸ்டண்ட் மார்க்கம்தான் வெளி 16இன் கள்ளத்தீர்க்தரிசி; வெளி 13:11–17 இல் ஆட்டுக்குட்டிக்கு ஒப்பான இரண்டு கொம்புகளை உடையதாயிருந்து, பிறகு வலுசர்ப்பத்தைப் போலப் பேசின அதே வல்லமைதான் இது. இந்த வல்லமைதான் ‘பெரிய அற்புதங்களை நடப்பித்து, மிருகத்தின் முன்பாக அந்த அற்புதங்களைச் செய்யும்படி தனக்குக் கொடுக்கப்பட்ட சத்துவத்தினாலே பூமியின் குடிகளை மோசம்போக்கி(யது)’. வெளி 13:13,14. (வெளி 19:20 இல் கள்ளத் தீர்க்கதரிசி பற்றிக் கொடுக்கப்பட்ட விபரத்தோடு இதை ஒப்பிடுங்கள்).

### 12. வெவ்வேறான இந்த அமைப்புகள் இணைந்து வல்லமையாகச் செயல்பட முடியுமா?

**வெளிப்படுத்தல் 16:14.** *அவைகள் அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் ஆவிகள்; அவைகள் பூலோக* ________________ ________________ *சர்வ வல்லமையுள்ள தேவனுடைய மகாநாளில் நடக்கும் யுத்தத்திற்குக் கூட்டிச் சேர்க்கும்படிக்குப் புறப்பட்டுப் போகிறது.*

**குறிப்பு:** ஆம், அவர்கள் ஒன்று சேர்வார்களென்று தேவன் சொல்லுகிறார். தேவ மக்களுக்கு எதிராக வஞ்சகத்தைப் பரப்பவும், கூட்டணி அமைக்கவும் அவர்கள் ஒன்று சேர்வார்களாம். ‘சர்வ வல்லவரின் மகா யுத்த நாள்’ என்பது, ஸ்திரீயின் சந்ததியான மற்றவர்களுடனே வலுசர்ப்பம் யுத்தம்பண்ணச் செல்கிற சம்பவம் ஆகும். வெளி 12:17.

### 13. இந்தக் கடைசிகாலக் கூட்டணிக் கட்சிகள் என்னென்ன விதங்களில் வல்லமையாகச் செயல்படும்?

**வெளிப்படுத்தல் 16:14.** *அவைகள்* ____________________ *செய்கிற பிசாசுகளின் ஆவிகள்.*

**வெளிப்படுத்தல் 13:13,14.** *அது மனுஷருக்குமுன்பாக வானத்திலிருந்து பூமியின் மேல் அக்கினியை இறங்கப்பண்ணத்தக்கதாகப் பெரிய* ________________ *நடப்பித்து, மிருகத்தின்முன்பாக அந்த அற்புதங்களைச் செய்யும்படி தனக்குக் கொடுக்கப்பட்ட சத்துவத்தினாலே பூமியின் குடிகளை* ________________.

**குறிப்பு:** கடைசிக்கால இந்தக் கூட்டணியானது பிசாசின் ஆவிகளினால் மகத்துவமான பல அற்புதங்களைச் செய்யும்; கிட்டத்தட்ட உலகம் முழுவதுமே அதை நம்பி (வெளி 13:3) வஞ்சிக்கப்படுவார்கள். ‘உன் சூனியத்தால் எல்லா ஜாதிகளும் மோசம்போனார்களே’ என்று வெளி 18:23 சொல்கிறது.



### 14. தேவனுடைய கடைசிகால மக்கள் வஞ்சிக்கப்படாமல் பாதுகாப்பது எது?

**ஏசாயா 8:20.** ________________ __________ ________________ *கவனிக்கவேண்டும்; இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை.*

**குறிப்பு:** வேதாகமத்தை வைத்து, அனைத்தையும் தேவ மக்கள் சோதித்தறிய வேண்டும். அப்போது, அவர்கள் வஞ்சிக்கப்படமாட்டார்கள். ஏனென்றால், அந்த அற்புதங்களும் போதனைகளும் பிசாசின் ஆவிகளால் உண்டானவையா, ஆண்டவரால் உண்டானவையா என்பதைச் சோதித்தறிவார்கள்.

## நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

பாபிலோனைவிட்டு வெளியேறி, மீதமான தம் சபையில் தஞ்சம்புகுமாறு, இன்று தேவன் தம் மக்களை அழைக்கிறார். பாபிலோனிலேயே இருப்பவர்கள் அவள் பாவங்களிலும் அவளுக்கு வரும் வாதைகளிலும் பங்கடைவார்கள் என்றும் அவர் சொல்கிறார். நோவாவின் நாட்களில் தேவன் தம் மக்களைக் காப்பாற்ற வைத்திருந்த பேழைக்குள் எட்டே எட்டுபேர்தான் சென்றார்கள். இன்று, புகலிடம் தரும் பேழையாக தேவன் தம் மீதமான சபையை வைத்திருக்கிறார்; லட்சக்கணக்கானோர் அதனுள் வருகின்றனர். ‘நீயும் உன் வீட்டார் அனைவரும் பேழைக்குள் பிரவேசியுங்கள்’ என்று இயேசு அழைக்கிறார். ஆதியாகமம் 7:1. அவருடைய அழைப்புக்குச் ‘சரி’ என்று இணங்குவீர்களா?

**பதில்:** ______________________________________________

## துணைப்பகுதி

***மேலும் படிப்பதற்கான கூடுதல் தகவல்கள் இந்தப் பகுதியில் உள்ளன.***

### ரோமும் அமெரிக்காவும் எவ்வளவுக்கு வல்லரசுகள்

கடைசிக்காலத்தில் போப்புமார்க்கமும் அமெரிக்காவும் சேர்ந்து, உலகம் முழுவதும் மிருகத்தை வணங்கும்படியான செல்வாக்கை உண்டாக்குமென்று வெளி 13 கூறுகிறது. இப்படிச் செய்யுமளவிற்கு அவை வல்லமையுள்ளவையா?

உலகத்தில் அதிகாரமிக்க மத–அரசியல் வல்லமை போப்புமார்க்கம்தான். கிட்டத்தட்ட உலகின் முக்கிய நாடுகள் அனைத்துமே தங்கள் நாட்டுப் பிரதிநிதிகளை வாடிகனில் வைத்துள்ளது. அனைத்து நாடுகளுமே போப்புமேல் மிகுந்த பயபக்தியும் மரியாதையும் கொண்டுள்ளன. முன்னாள் ரஷிய தலைவரான கார்பசோவ், “போப்புவின் பெருமுயற்சியும் அதிக ஈடுபாடும் இல்லாவிட்டால், சமீப வருடங்களில் கிழக்கு ஐரோப்பாவில் நிகழ்ந்த எதுவும் நடைபெற்றிருக்க வாய்ப்பில்லை. உலக அரங்கில் அவருடைய அரசியல் ஈடுபாடும் அதில் அடங்கும்” என்று சொன்னார். போப்பு மார்க்கத்தின் தலைமையின்கீழ் உலக மதங்களை எல்லாம் ஒன்றிணைக்க 50 க்கும் மேலான முறை உலகப் பயணங்களை போப் மேற்கொண்டிருக்கிறார்.

உலகிலேயே இராணுவப்பலம் வாய்ந்த, செல்வாக்குமிக்க ஒரு நாடாக அமெரிக்கா கருதப்படுகிறது. “இந்தக் கிரகத்திலேயே ஒரே வல்லரசு அமெரிக்காதான்.”

“உலகின் முக்கிய நிகழ்வுகளை அமெரிக்காவின் அதிகாரம்தான் தீர்மானிக்க வேண்டியதிருக்கும்”. அமெரிக்க ஐக்கிய நாடுகளும் பாப்புமார்க்கமும் கைகோர்க்குமென்று வேதாகம தீர்க்கதரிசனம் முன்னுரைக்கிறது; அந்தக் கூட்டணி உருவாகி வருவதை உலக நிகழ்வுகள் தெளிவாகக் காட்டுகின்றன.

1 Toronto Star, March 9, 1992, p, A-1
"The UN Obsession," Time, May 9, 1994, p 86.
Jim Hoaglad, "Of Heroes ...," The Washington Post, August 21, 1991, p. A-23.

**LMN Kakkum Karangal**
35, Chethupakkam
Thamarai Pakkam Post,
Thiruvallur, Chennai 601103
Tel: +91-9444841268
lmnkakkumkarangal@gmail.com